Koviloor Digital Library

KVC0144-4

சிவமயம்.

பெண்கள் ஜாதக மென்னும் ருதுநூல்சாஸ்திரம்.

பரிகாரத்துடன்

இஃது,

சிறுமணவூர்,

முனிசாமிமுதலியா

ரவர்களால் இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

Koviloor Digital Library

உ

கடவுள் துணை.

பெண்கள் ஜாதகமென்னும்

ருதுநூல் சாஸ்திரம்.

காப்பு-விருத்தம்.

இத்தரையில் மானிடமென்றுருவுகொண்ட
இருபாலிற் பெண்களிட ருதுநூலப்பா
முத்திபெற்ற முன்னோர்கள் சொன்னவாக்கு
மொழியொன்றுத் தப்பாது முன்னேன்சாட்சி
சத்திசிவன் மால்சாட்சி குகனும்சாட்சி
சர்வயிரும் படைக்கும் பிரமன்சாட்சி
யெத்திசையும் பரிகாரத்தோடு சொன்னேன்
என்தாயார் சரஸ்வதியி னிருதாள்காப்பே.

ருதுவாகும் மாசபலன்-விருத்தம்.

சித்திரையில் புருஷனுக்கு ஆகாதப்பாசுகமடைவர்ள் வை காசிமாதமானல், புத்திர சம்பத்தாயிருப்பாள் ஆனிமாதம் புரு ஷரெல்லாமிச்சிப்பாள் ஆடிமாதம், சித்திரம்போல் பிள்ளைகளை மிகவேபெற்று சிறப்படைவாள், ஆவணியில் ருதுவேயானல் பத்தியுடன்வீர்த்தியுண்டு புரட்டாசிக்கு பதிவிரதையாயிருப்பாள் பரிட்சைபாரே.

சித்திரைமாததோஷத்திற்கு சாந்தி.

சித்திரையில் ருதுவான தோஷத்திற்குசெய்வே பரிகாரமு றையைக்கேளும், பத்தினிக்கும் புருடனுக்கும் புதிய ஆடைபாங் காக யுடுத்தியேகுத்தவைத்து, முத்திலுமே துவாரங்கள் செய்த தாக மண்கலயம்பிருவரிட சிரசில்வைத்து, சுத்தசலம் வார்த்தபி ன்னர் சூறையிட்டுகுமங்கலிக்கு ஆடைதான தானஞ்செய்யே.

ஆடிமாததோஷத்திற்கு சாந்தி.

ஆடியிலேவடிவுகண்ட பெண்தானப்பா அனேவரையுமிச்சிப் பாவென்றுகற்று, தேடியேபலவிதமாங்களிக லெல்லாந்தாம்பாள

Koviloor Digital Library

ந்தனில்வைத்து பூஷம்வைத்து, கோடியென்ற சேலைகட்டிக்குந்த வைத்து குமரிக்கிகாட்டியதை திருஷ்டிசுத்தி, ஆடுகின்றபிள்ளைக ளாம்பலருக்கிந்தால் ஆடிமாதந்தோஷமதுமகன்றுபோச்சே.

பாரப்பா அற்பிசியில் ருதுவேயானால் பிள்ளைகளையின்றெடு த்து விதவையாவாள் பாரப்பாகார்த்திகையில்ருதுவேயானால் ப லரையுமேதூஷிப்பாள் கோபியாவாள் பாரப்பா மார்கழியில் ரு துவேயானால் மக்களுண்டு பொருளுண்டு மனதுநோகாள், பார ப்பாதைமாதம் ருதுவேயானால் புண்யவதியாயிருப்பாள் பொரு மைகொள்ளே.

அற்பிசிமாததோஷத்திற்கு பரிகாரம்.

அற்பிசியில் ருதுவானதோஷத்திற்கு அப்பனே சாந்தியது வகையைக்கேளு, கற்புடையமங்கிலியை கண்டழைத்துகருத்தாக அப்பியங்கம் செய்துவைத்து, பொற்ருலிசெகப்பாடை மஞ்சள் குங்கம் பூவுடனேதாம்பூலமிதுகளெல்லாம், நற்கொடைபோல்தா னமது செய்வாயாகில் நாடாது அற்பிசியின் தோஷந்தானே.

கார்த்திகைமாததோஷத்திற்கு பரிகாரம்.

கார்த்திகைமாததோஷங் கடக்கவேசாந்திசேளு
பார்த்துசிவாலயத்தில் பசுவுடனெய்தானப்பா
வார்த்துதீபம்வைத்தால் வஞ்சிக்கோர்தோஷமில்லை
கீர்த்தியாம்கவனமாக சித்தர்கள்சொன்னவாக்கே.

பெருமையுண்டு திரவியமுங்குறைவிராது பாக்கியவதியாயி ருப்பாள் மாசிமாதம், அருமையடா பங்குனியில்ருதுவேயானால் ஆயுசுண்டுமக்களுண்டு அதிகமுண்டு, மருமமாயிருந்ததடா யிந்த நால்தான் மண்டலத்தி லனைவோர்க்கும் வேணுமென்றே, சிறும னைவூர் முனிசாமியெழுதிவைத்தான் சித்திரம்போல் எதிர்முழி யாய்க்காணலாமே.

ருதுவாகும் வாரத்தின் பலாபலன்.

ஆமப்பாஞாயரென்றகிழமையானால் ஐயையோ வியாதியினால் மெலிந்துபோவாள், ஆமப்பாதிங்களிலே ருதுவேயானால் அருந் தாதிபோலிருப்பாள் கற்புகாப்பாள், ஆமப்பாசெவ்வாயில் தக்க மூண்டு அதிகசுகங்கிடையாது விதவையாவாள், ஆமப்பா புதன் கிழமைபிள்ளையுண்டுபொருளுமுண்டுபுத்திமுண்டுபுகழுண்டாமே.

Koviloor Digital Library

ஞாயிற்றுக்கிழமையின் தோஷத்திற்குபரிகாரம்.

ஆதியாம்வாரந்தன்னில் ஆனதோர்மாதுநல்லாள்
வியாதியால்மெலிவாளென்று விளம்பியதோஷத்திற்கு
கோதுமையரிசியாலே குமரிக்குதிஷ்டிவாங்கி
வீதியில் அதிதிகட்கு விரைந்துதானஞ்செய்யே.

விடுபோல்பந்தல நபோட்டுமைந்தா வழியதற்கு இரண்டுபுரம் அமைத்துநிற்கான், நாடியேபெண்ணையொரு வழியாய்சென்று நல மாக முக்காடிட்டுபடுக்கச்சொல்லி, தேடியே ஒருமூலை தியில்மா ட்டி, தேன்மொழியை மறுவழியாய் வரவேசொல்லு, ஓடியே வந் தவடன் அப்பியங்கஸ்தானம் உடனேசெய்து சிலதானங்கேளே.

தானமதுசுமங்கலியை யழைத்துவந்து தக்கபடி அப்பியங்க ம்செய்துவைக்கவேணுமடா சிகப்புநிறசேலையொன்று வெத்திலை யும் பாக்குமலர் மஞ்சள்குங்கும், ஆனமட்டுசுயம்பாகம் இதகளை ல்லாம் அறிவையர்க்குதானமது செய்தாரானல் காணுமோசெவ் வாயின் கிழமைதோஷங்கண்காணுதோடுமடா திண்ணந்தானே.

வியாழமென்றகிழமையிலேருதுவேயானல் விளம்பினர் பா க்கியவதியென்றேசொல்லு தாழ்வில்லைவெள்ளியென்ற கிழமையா னல் தன்புருஷன் மனம்போலே பணிகள்செய்வாள், பாழான சனிக்கிழமை ஆகாதையா படமுடியாதுன்பமடா தரித்திரியா வாள், ஏழானவாரபலன் இதுவேயாச்சு இடப்பலனைச் சொல்லு கிறேம் ஏத்திக்கொள்ளே.

சனிக்கிழமையின் தோஷத்திற்குபரிகாரம்.

பங்கமடாசனிக்கிழமை கொடியதோஷம் பரிகாரஞ்செய்யவே வ்ருல் உளவுகேளு வெங்கலமரம் பாத்திரத்தில் எள்ளின்யெண் ணை வார்த்தந்தப்பெண்ணழகைப் பார்க்கச்சொல்லி, மங்காதபசு ம்பாலி கறந்துவேறே மடக்கிலேவார்த்தந்த பெண்முன்காட்டி எங்கோருவர்க்கானலும் தானஞ்செய்தால் ஏகுமடா சனிக்கிழ மை தோஷந்தானே.

ருதுவாகுமிடத்திற்கு பலாபலன்

விட்டுக்குவெளியில் விபசாரியாவாள் வனமென்ற பூந்தோப் பில் சம்பத்துண்டு, விட்டுக்கு உள்ளானல் ஒழுக்கமுண்டு விடுதி யென்றபடிக்கையிலே சுகமேபடைவாள், கேட்டுக்கொள் பசுத்

Koviloor Digital Library

தொழுவந்தன்னிலானல் கெடுதியில்லை பதிவிரதையாயிருப்பாள், நாட்டுக்குள் நடக்கையிலே ருதுவானக்கால் நல்லதப்பாசுகமடைவாள் நம்புவாயே.

நம்படாநீர்க்கரையில் ருதுவேயானல் நல்லமழையுண்டாகி ஆபுசுண்டுவம்படா படுக்கையிலே ருதுவானக்கால் வளர்த்தெடுத்த தந்தையனிறந்துபோவான் கும்பமடா ஸ்ரீகளுக்கு நடுவேயானல் குற்றமில்லை தனசம்பத்தாயிருப்பாள், தெம்படா கொல்லையிலே ருதுவேயானல் திரவியத்தோடேயநிக பூமியுண்டாம்.

நிற்கையிலே ருதுவானல் நன்றுய்வாழ்வாள் நிர்வாணமாயிருந்தால் கிலேசமப்பா. புசிக்கையிலே வெகுநன்மை யென்னலாகும் பிறர்வீட்டிலுண்வருக்கும் விரோதியாவாள் மிக்கதொருகோயிலிடந்தன்னிலானல் மேன்மையில்லையுபாயமதாய் வாழ்ந்திருப்பாள் தக்கதொருகிராமத்தின் மத்திலானல் தடையன்றி விப்சாரியாவாள்பாரே,

ருதுவான யிடத்தைக்கொண்டு லக்கினந்
தெரிந்துகொள்ளல்.

குடியிருக்கும் வீட்டுக்குள் ருதுவேயானல் கூறடாமேஷலக்கினம் குறித்துக்கொள்ளு, இதமான பசுத்தொழுவந் தன்னிலானல் எழுதடாரிஷபலக்கின மென்றுநீதான் வடிவழகி நிர்வாணமாயிருக்கும்போது வடிவுகண்டால் மிதுனலக்கினமென்றேசொல்லு, தடமென்ற நீர்க்கரையில் ருதுவானக்கால் தடையன்றி கடகலக்கினமென்றுசொல்லே

சொல்லப்பா வீட்டுக்குவெளியேயானல் சிங்கலக்கினமென்றுசீராய்ச்சொல்லு, சொல்லப்பா பூவனத்தின் தோப்பிலானல் சொகுசான கன்னியென்ற லக்கினந்தானே அல்லடாகிராமத்தின் மத்தியானல் வறையடா தூலாலக்கினமென்று நீதான், வில்லடா அசல்வீட்டில் ருதுவானக்கால் விருச்சிகலக்கினமென்று விளம்புவாயே,

தன்வீட்டில் ருதுவானனென்று சொன்னம் தறுசென்ற லக்கினந்தான் தடையேதப்பா, பெண்ணவள்தான் கிணற்றறுகே ருதுவானக்கால் பேசடா மகரலக்கின மென்றுநீதான், வெண்ணவே ஆறுகுளங்கரையிலானல் எழுதடா லக்கினமது கும்பமென்

Koviloor Digital Library

று, பன்னுவது ஸ்தானமும் நீராடும்போதும் பகரடா மீனலக்கினம் பெரியோர்வாக்கே.

மேற்கூறிய (கூட) லக்கினங்களுக்கும் பலன்காண்க.

மேஷம்-தரித்திரம் தலாம்-தனசம்பத்து
ரிஷபம்-சொற்பபுத்திரர் விரிச்சிகம்-விபசாரி
மிதுனம்-பதிபட்சமுடையவள் தனுசு-உத்தமமத்திமமானவள்
கடகம்-வெருபுத்திரருண்டு மகரம்-மானமில்லாதவள்
சிங்கம்-புருஷனை நீங்கிவிடுவாள் கும்பம்-தரவியமுண்டு
கன்னி-பதிவிரதை மீனம்-புத்திரருண்டு

ருதுவாகும்போது யார்பார்க்கிருக்களோ
அந்தத்தெரிசனபலன்

தானேதான்கண்டாலுந் தக்கமப்பா. தன்புருஷன்கண்டாலுந்தக்கமாகுந், தேனனகன்னிகா ஸ்ரீகண்டால்தெய்வபக்தியோடு புண்யவதியென்பார்கள், வீணனகைம்பெண்கள் கண்டாரானால் விதவையப்பா மங்கலியமிழந்துபோவாள், வானனயெண்ணெயிட்ட தலையர்கண்டால் வளிதையவள் தரித்திரமே யனுபவிப்பாள், வேகிகண்டால் போகபாக்கியமாயிருப்பாள் வியாதியஸ்தர்கண்டாக்கால் நோய்தானப்பா, தாசியொத்த வெள்ளாட்டிக்கண்டாளாகில் தரித்திரமேயனுபவிப்பாள் தரணிமீது கூச்சமில்லா மங்கிலிய ஸ்திரிகள் கண்டால் குறைவில்லை சுமங்கிலியாம் வாழ்ந்திருப்பாள், நீச்சமத ஸ்ரீபுருஷர் யார்கண்டாலும் நெறிதவறி ஜாகிவிட்டுநீங்குவாளே.

திதி-பலாபலன்.

பிரதமை-பாவியாயிருப்பாள், துவிதியை-பாக்கியவதியாயிருப்பாள், திரிதிகை-குழந்தைகளைப் பெருவாள், சதுர்த்தி-பலபுருஷரை இச்சிப்பாள், பஞ்சமி-நன்மையுடையவள், சஷ்டி-சண்டைக்காரியாயிருப்பாள், சப்தமி-புத்திரபாக்கிய முண்டாயிருப்பாள், அஷ்டமி-ராட்சசியாயிருப்பாள், நவமி-கிலேசமாயிருப்பாள், தசமி-புத்திரபாக்கிய முண்டாயிருப்பாள், ஏகாதசி-சுபகரமாயிருப்பாள், துவாதசி-பலரையுந்தோஷிப்பாள், திரயோதசி-நல்லதேஜசு உண்டாயிருப்பாள், சதுர்த்தசி-பாவஞ் செய்பவளாயிருப்பாள், பௌர்ணமி-அசல்மிடுக்கிவாள், அமாவாசை-தரித்திரமாயிருப்பாள்.

Koviloor Digital Library

நட்சத்திர பலாபலன்-நொண்டிச் சிந்து

அசுவனி-சுபகரமாம், பரணி
ஆகாது அயல்வீடு வாழப்பொருக்காள்
கிர்த்திகை தரித்திரமாம் ரோகனிக்
குக் கிளிபோலேமதலைகள் மிகப்பெருவாள்
மிருகசிரிடமானல்-மிக
சுகிரமுடையவளாயிருப்பாள்
திருவாதிரை-தரித்திரமாம்-நல்ல
திடமானபுனர்பூசம்-பதிவிரதை
பூசம்-பதிபட்சமுயைாள் ஆயிலியம்
ஆகாது மெத்தவுங் சுபடியடா
மகம்-புத்திர ராசமடைவாள், பூரமென்ற
நட்சத்திரமாகாது கெர்பரஷடமாம்
உத்திரத்தில்-தனதான்யம், அஸ்தமது
உரவுபந்துக்களே ரட்சித்திடுவாள்
சித்திரைக்குப்-பதிவிரதை அந்த
சுவாதி-வெகுபுத்திரருண்டாயிருப்பாள்
விசாகம்-அழுக்குடையாள் அனுஷம்
விட்டுப்பிரியாள் கொண்டகனவனையே
கேட்டையில் ருதுவானல் மெத்த
கெடுதியடா முற்றுஞ்சிறையிருப்பாள்
மூலம்-புத்திரருண்டு பூராடம்
முழுதும்விசனத்தால் மூழ்கியிருப்பாள்
உத்திராடம்-சம்பத்துடையாள், திரிகோணம்
ஒழியாதபாக்கியத்தில் வாழ்ந்திருப்பாள்
அவிட்டம்-பிள்ளைகளுண்டு-சதயம்
ஆயுசுபூர்ணமுடையவளாம்
பூரட்டாதிலே-ருதுவானல்
பிணியாளன்றனக்கே வாக்குபடுவாள்
உத்திரட்டாதியென்ற-நட்சத்திரம்
உல்லாசமாகவே வாழ்ந்திருப்பாள்
ரேவதிக்கி-சகலசுகம் உள்ளளவும்
சொம்பமும் பெருமையாய் வாழ்ந்திருப்பாள்.

Koviloor Digital Library

யோகபலாபலன்.

விஷ்கம்பம்-விசனமுண்டாயிருப்பாள், பிரீதி-சந்தோஷமுண்டாயிருப்பாள், ஆயுஷ்மான்-தீர்க்காயுளுண்டாயிருப்பாள், சௌபாக்கியம்-சம்பத்துண்டாயிருப்பாள், சோபனம்-மங்களகரமாயிருப்பாள், திரிதி-தைரியமாயிருப்பாள், சூலம்-துர்மரணமுண்டாயிருப்பாள், கண்டம்-பாவியாயிருப்பாள், விருத்தி-நன்மையுண்டாயிருப்பாள், துருவம்-பதிவிரதையாயிருப்பாள், வியாகாதம்-விதவையாவாள்; அரிஷணம்-யோகியாயிருப்பாள், வச்சிரம்-கல்லரூபவதியாயிருப்பாள், சித்தி-சகல சம்பத்துண்டாயிருப்பாள், வியதீபாதம்-கொடியவிசனமாயிருப்பாள், வரியான்-தர்மசிந்தனையாயிருப்பாள், பரிகாரம்-உறவுக்குப்பகையாயிருப்பாள், சிவம்-நல்லவளாயிருப்பாள், சித்தம்-தரியமுண்டாயிருப்பாள், சாத்தியம்-போகபாக்கியமாயிருப்பாள், சுபம்-சந்தோஷமுண்டாயிருப்பாள், சுப்பிரம்-வியாதியாய் மரணமாவாள், வைதிருதி-உயிர்வதைசெய்வாள்.

கரணபலாபலன்.

பவம்-சுகமுண்டாயிருப்பாள், பாலவம்-சௌபாக்கியவதியாயிருப்பாள், கரசி-விதவையாவாள், வணசி-கொள்ளக்கொடுக்கவல்லவள், சதுஷ்பாகம்-சந்தோஷமில்லாதவள், நாகவம்-நன்மையில்லாதவள், கிமஸ்துக்கினம்-தரித்திரமாயிருப்பாள்.

ஏழாமிடப்பலாபலன்.

சூரியன்-விதவையாவாள், சந்திரன்-குழந்தைகளோயிழப்பாள் செவ்வாய்-வேசையாவாள், புதன்-மலடியாவாள், குரு-பாக்கியமில்லாதவளாயிருப்பாள், சுக்கிரன்-வீடுவிட்டுப்போவாள், சனி-வியாதியாயிருப்பாள், இராகு-புத்திரனோயிழப்பாள், கேது-உறவுக்குப் பகையாயிருப்பாள். நாழிகைபலாபலன்.

ம-நாழிகையுள்ளாகில் உத்தமம் உ-நாழிகையுள்ளாகில் மத்திபம். கூ-நாழிகையுள்ளாகில் அதமம்.

காலபலாபலன்.

பிராதக்காலமானால்-சுபம், முற்பகலானால்-தீர்க்காயுசாத்திரை மத்தியானமாகில்-புத்திரசம்பத்துண்டு பிற்பகலானால்-சோரத்துவம், சாயங்காலமாகில்-வெகுபுத்திரருண்டு, அஸ்தமானத்தாகில்-வேசையாவாள், முன்னிராத்திரி-தீர்க்காயுளுண்டு நடு இராத்திரி-விதவையாவாள் பின்னிராத்திரியில்-சுகமில்லாதவள் சந்திகளில்-பாக்கியமற்றவள்.

Koviloor Digital Library

(ஸ்தனக்குறிப்பு) சாயங்காலமாகில் குப்பிறுங்கிபோலிருப்பாள்
அர்த்தராத்திரியாகில் இரண்டுள்ளுருங்கிப்போம்

ஜாமபலாபலன்.

க-வது—ஜாமமாகில் சுகமாயிருப்பாள்
உ-வது—ஜாமமாகில் சுபகரமாயிருப்பாள்
ங-வது—ஜாமமாகில் மங்கியமுண்டு
ச-வது—ஜாமமாகில் பலரையும்வேண்டுவாள்

ஜாமஸ்தனக்குறிப்பு.

க-வது—ஜாமம் ஏர்த்துங்கொங்கையுண்டு
உ-வது—ஜாமம் குத்துமுலையுண்டு
ங-வது—ஜாமம் சாய்ந்தமுலையுண்டு
ச-வது—ஜாமம் சரிந்தமுலையுண்டு

ருதுஸ்திரீ வஸ்திரக்குறிப்பு.

நகைத்தால்-சிகப்புப்புடவை கோபியால்-வெள்ளாடைபுடவை
காரணமாகில்-கறுப்புப்புடவை ஷெவிந்துளிடபலாபலன்.

வட்டமாகில்-பொருள்சேரும் சதுரமாகில்-சத்துருநாசம்
பிறைபோலாகில்-ஆயுசுகுன்றும் நீண்டிருந்தால்-மரணம் வண்டு
போலிருந்தால்-புத்திரருண்டு

(தோஷபலாபலன்)க-வது—நாழிகையாகில் புருஷனுக்காகாது
உ-வது—நாழிகையாகில் திரவியநாசம்
ங-வது—நாழிகையாகில் தரித்திரமாயிருப்பாள்

நட்சத்திர குணம்.

அசுவனி-ரோகிணி-எருகசீரிடம்-பூசம்-உத்திரம்-அஸ்தம்-
சித்திரை-சுவாதி-விசாகம்-அனுஷம்- திருவோணம் - அவிட்டம்-
சதயம்-உத்திரட்டாதி-இரேவதி இப்பதினைறும் உத்தமம்,

மகம்-திருவாதிரை-கார்த்திகை-கேட்டை-புனர்பூசம்-பூசம்
இவ்வைந்தும்மத்திபம் மற்றவை அதமமென்பதாம்.

ருதுவானவள் கட்டிருந்த சேலையைப்பார்த்து
இன்னதிசையில்ஆணென்றுதெரிந்துகொள்ளல்

கிழக்கு—கிழிந்தபுடவையுடையவள்
தென்கிழக்கு—பச்சைப்புடவையுடையவள்
தெற்கு—சிகப்புப்புடவையுடையவள்
தென்மேற்கு—வெள்ளாப்புடவையுடையவள்

Koviloor Digital Library

மேற்கு—அழுக்குப்புடவையுடையவள்
வடமேற்கு—கறுப்புப்புடவையுடையவள்
வடக்கு—பஞ்சவர்ணப்புடவையுடையவள்

ஷெடபலாபலன்.

கிழிந்தபுடவையானால்-கலகம் பச்சைப்புடவையானால்-தரித்திரம் சிகப்புப்புடவையாகில்-வியாதி வெள்ளைப் புடவையானால்-சந்தானம்அழுக்குப்புடவையானால்-நன்மைகறுப்புப்புடவையானால் நன்மை

பஞ்சவர்ணப்புடவை-தரித்திரம் சரிகைமஞ்சட் புடவை-சுகம்

(பிந்தாருடம்)கிழக்கு கூ-துளிகண்டிருக்கும் மேற்கு-சு-துளி
தென்கிழக்கு-கூ-துளிகண்டிருக்கும் வடமேற்கு-கூ-துளி
தெற்கு-சு-துளிகண்டிருக்கும் வடக்கு-சூ-துளி
தென்மேற்கு-உ-துளிகண்டிருக்கும் வடகிழக்கு-சு-துளி

(ஷெடபலன்) ஒற்றையாகில் ஆண்குழந்தைகள் இரட்டையாகில்பெண்குழந்தைகள்

(புத்திராருடம்)கிழக்கு-உ-புத்திரர் மேற்கு-சூ-புத்திரர்
தென்கிழக்கு-க-புத்திரர் வடமேற்கு-உ-புத்திரர்
தெற்கு-அ-புத்திரர் வடக்கு-கூ-புத்திரர்
தென்மேற்கு-ச-புத்திரர் வடகிழக்கு-ஐ-புத்திரர்
ஒற்றையாகில் சம்பத்துண்டு இரட்டையாகில்சோகமுண்டு

நிஷேகமுகூர்த்தக்கால் அளவு

பரணியில் ருதுவானால்-ஐ-மாதமும் - பூராடத்தில் ருதுவானால்-அ-மாதமும் மகம்-கஉ-மாதமும் திருவாதிரை-பூசம்- இரண்டிற்கும்-சு-மாதமும் ஆயிலியம்-கார்த்திகை-கேட்டை இதுகளுக்கு-ச-மாதமும் உத்திரம்-நி-மாதமும் அதற்குமேல் புருஷன்பார்த்தால் தோஷமில்லை யென்பதாம்பலதானப் பிரயத்தனஞ்செய்யலாம்.

ஒருபெண் கொள்ளவேணுமானல் சுபலட்சணங்கூறியது

1-வது ஒருபெண் கொள்ளவேணுமென்றால் அப்பெண்ணுக்குரிய சுபலட்சணமும் அவலட்சணமுங் கூறுகிறதாம்.

அப்பெண்ணினது கூந்தலது கோரைப்புல்லுபோல் நீண்டிருந்தால் அதனல் குடிப்பழுது நேருமென்று பெரியோர் கூறுகிறார்.

Koviloor Digital Library

மேற்படி கூர்நகம் பம்பையாயும் பரட்டையாயிருக்குமாகில் பழுதில்லையாம் இது சுபலட்சணமெனக்காண்க

மேலும் சுரட்டைமயிருயிருக்குமாகில் அக்குடும்பம் விர்த்தியாகும் விபசாரச்சந்தேகம்

ஏறுநெற்றியும் மிரண்டபார்வையும் திரண்டதாடியும் வேப்பிலைபோல் வளைந்தபுருவமும் பிடிக்குளடங்கிய கழுத்தும் பொருந்தியிருப்பாளாகில் பூர்ணவாழ்வு வாழ்வாளென்பது சந்தேகமில்லையாம்.

அதிலும் மேற்படி நெற்றியில் பாவட்டையின் பக்கங்களில் முன்சுழியொன்றிருக்குமாகில் மூத்தாருக்காகாதென்றும் பின்பக்கங்கழுத்துப்பிடரியில் பின்சுழியிருக்குமாகில் அப்பெண் அமங்கிலியாவாளென்றும் முன்னோர் கூறுகின்றார்.

வயிறிற்தொப்புள்தொடங்கி மார்புக்குழிபரியந்தம் ரேகையிருக்குமாகில் வாழ்வுகுறையுமென்பது உண்மையாம்.

இடதுபக்கத்து இடுப்புமேற் சொல்லியபடி இருக்குமாகில் அவள் யாதொரு குறைவில்லாமல் புத்திரபாக்கியமுந் தனசம்பத்தும் தானியசம்பத்தும் தீர்க்க ஆயுசாய் வாழ்வாளாம்.

தொடைகளிரண்டில் வலது தொடையில் கத்திரியாவது பாம்பின்படமாவது இருக்குமாகில் அப்பெண்ணின்வாழ்வுதாழ்வாகும்

மேற்படி தொடையில் மச்சங்களேதாவது உண்டாயிருக்குமாகில் தரித்திரவழியா யிருப்பாள்

இடது தொடையில் மேற்சொல்லிய கத்திரியும் அப்பாம்பின் படமிருப்பதுமன்றி மச்சமொன்றிருக்குமாகில் துன்பத்தைகொடுக்காது நன்மையே தருமென்பார்.

அப்பெண் காலையுதறி நடப்பாளாகில் அவள் குடும்பம் நசித்துப்போமென்று சொல்லுவார்.

அவள் நடக்கும்போது கால்தட்டம் ஒடியுமானால் அதுதரித்திரத்துக் கிடமாகுமென்றுரைப்பார்

அவள் நடக்கும்போது அமர்ந்தநடையுங் குளிர்ந்தமொழியும் உடையவளாயிருப்பாளாகில் அயல்குடும்ப விர்த்தியால் நீடித்து வாழ்வாளென்று அறிவுளோர் சொல்லுவார்.

பெண்கள் இலட்சணம்-முற்றிற்று.

Koviloor Digital Library

எமது அச்சுக்கூடத்தில் விற்பனைக்குத் தயாராயிருக்கும்

புத்தக விளம்பரம்.

இராமாயணம் கிளேஸ் 2-வாலியம் ஒஸ்திபதிப்பு	4	0	0
சாதாரண பாரதம் 4-வாலியம்	4	0	0
இக்துலா [அச்சிலிருக்கிறது]	4	0	0
சோதிடசிகாமணி ஒஸ்திபதிப்பு	3	8	0
இங்கிலீஷ், தமிழ் வைத்தியசிகாமணி ஒஸ்திபதிப்பு	3	0	0
இந்தியன் பினல்கோட் ராயல் ஒஸ்திபதிப்பு	3	0	0
கிராம முனிசீப்கோர்ட் ராயல் கிளேஸ்	3	0	0
கிரிமினல்கோர்ட் சட்டம் [அச்சிலிருக்கிறது]	2	0	0
பிரபஞ்சவுற்பத்தி ஒஸ்திபதிப்பு	2	0	0
சாதாரண இராமாயணம்	1	8	0
உலகவிசித்திரக்கதை ஒஸ்திபதிப்பு	1	0	0
விக்கிரமாதித்தன் கதை கிளேஸ்	1	0	0
பதிவிரதைகள் சரித்திரம்	0	12	0
விராடபர்வம் ராயல் 8-பேஜ் லெத்தோபடத்துடன்	0	12	0
பட்டணத்தார்புராணம் ராயல் 16-பேஜ் லெத்தோபட	0	12	0
பார்வதிபரணியமென்னும் விஷவைத்தியசிந்தாமணி	0	12	0
நஷ்டஜாதகம் கிளேஸ்	0	8	0
சவகண்ட ஆரூடம் கிளேஸ்	0	8	0
மூலிகைமர்மம் கிளேஸ்	0	8	0
திருத்தணிகைச் சன்னதிமுறை நிக்கு	0	8	0
சரீரசாஸ்திரம் கிளேஸ்	0	8	0
சிவவாக்கியம் 1000-ம்பாடல்கள் கிளேஸ்	0	8	0
மனமோகனக்கண்ணாடி கிளேஸ்	0	8	0
ஜெகத்தர்க்ஷா கிளேஸ்	0	8	0
புலவுநூல் இந்தியா சமையல்சாஸ்திரம் கிளேஸ்	0	8	0
கண்கட்டுவித்தை	0	6	0
ஷே. 2-ம் பாகம்	0	6	0
சகாதேவர் சோதிடம்	0	6	0
திருநேத்திரசிந்தாமணி	0	5	0
பெண்கள் ருதுஜனனஜாதகம்	0	4	0
சர்வபிரயாண சகுனசாஸ்திரம்	0	4	0
அகடவிகட சம்சாரி	0	4	0
வாந்திபேதி நிவாரணி	0	2	0
சுருக்குபஞ்சபட்சி	0	2	0
சைவானுஷ்டானவிதி	0	2	0
அவிவேகபூரணகுருகதை	0	1	6
விபூதி ருத்திராட்ச மகத்துவம்	0	1	3

இப்படிக்கு,

சிறுமணலூர்-முனிசாமிமுதலியார்,

நெ. 12. சட்டண்ணைநாய்க்கன் வீதி,

தபோ போஸ்டு, மதராஸ்.